# அறிமுகம்

ஆயுதப் போராட்டம் நடைபெறும் இடங்களில் உளநலம், உளசமூக வேலைகள், உளவளத்துணை தொடர்பான சர்வதேச இதழின் முதலாவது வெளியீடு 'சமுதாய வடு' சம்பந்தமான கட்டுரை ஒன்றுடன் தொடங்குகிறது. இலங்கையில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தயா சோமசுந்தரம், தனது நாட்டில் இடம்பெறுகின்ற உள்நாட்டு யுத்தம் சமூகரீதியில் ஏற்படுத்தியிருக்கின்ற சீரழிந்த விளைவுகளைப்பற்றி விபரித்துள்ளார். மேலும், அவர் எவ்வகையான உதவிகள் தேவை என்பது பற்றியும் ஆராய்ந்துள்ளதுடன், அக்கறையுடன் கூடிய ஆனால் அரைகுறையான உதவி வழங்கல்களினால் உள்ளூர் பண்பாட்டில் பாரதூரமான, அழிவை ஏற்படுத்துகின்ற பக்கவிளைவுகளைப் பற்றியும் எச்சரித்திருக்கின்றார். சோமசுந்தரத்தின் கூற்றுப்படி, உளநல மேம்பாடு மற்றும் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய உளநலப் பிரச்சினைகளைக் கையாளல் தொடர்பான உதவித்திட்டங்கள் சமுதாயத்தை அடியொற்றியதாக இருக்கவேண்டும். அவை உள்ளூர் சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதோடு, பாரம்பரியமாகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வழிவகைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

டீ ஜோங், கிளைபர், பியூறற்றிக் என்போரால் எழுதப்பட்ட "ஆயுதப் போராட்டம் நடைபெறும் இடங்களில் உளநலத்திட்டங்கள்" என்கின்ற கட்டுரை மேற்குறிப்பிடப்பட்டதை ஒத்ததான, ஒரு சமூகத்தை அடியொற்றிய திட்டத்தை விபரிக்கின்றது. இந்தத் திட்டமானது பொஸ்னியா – ஹேசிகோவினா இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தக் கட்டுரையாளர்கள் இந்தத் திட்டத்தினது கொள்கை அடிப்படை-களை முன்வைப்பதுடன், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதைக் குறிப்பிடுகின்றனர். கலாசாரத்தைப் பற்றிய நுண்ணுணர்வு அவசியம் என்ற கருத்தில் டீஜோங், கிளைபர், பியூறற்றிக் என்போர் சோமசுந்தரத்துடன் ஒத்துப்போகின்றனர். ஆயினும் வெளியாட்களினால் பேணப்படும் தலையீடுகளின்போது, இரண்டு கலாசாரங்கள் சந்தித்துக் கொள்கின்றமையையும், அதனால் அவற்றிற்கிடையிலான ஒரு மோதல் ஏற்படலாம் என்பதையும் இவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றார்கள். தவிர்க்கமுடியாதபடி, உள்ளூர் கலாசாரங்களில் மேற்கத்தையக் கருதுகோள்களின் மேலாதிக்கம் இருக்கத்தான் செய்யும். அறிமுகப்படுத்தப்பட்ட மேற்கத்தையக் கொள்கைகளின் பொருத்தப்பாடு பற்றிப் பார்ப்பதாயின், அத்தகைய திட்டங்களினால் நன்மையடைந்த மக்களின் தொகையைப் பற்றியும் பார்க்க வேண்டும்.

டி.ஜோங், கிளெபர், பியூறற்றிக் ஆகியோரால் விபரிக்கப்பட்ட திட்டத்தில் உள்ளூர் உளவளத்துணையாளர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். வன்டர் வீர் உடைய 'ஆயுத முரண்பாடு நடைபெறும் பிரதேசங்களில் உளவளத்துணையாளரைப் பயிற்றுவித்தல்' எனும் கட்டுரை அத்தகையதான ஒரு பயிற்சிக்குரிய கோட்பாட்டு அடிப்படைகளை விபரிக்கின்றது. வன்ட வீரைப் பொறுத்தவரையில் அப்படியான ஒரு பயிற்சித் திட்டமானது வெற்றிகரமாக வரவேண்டுமானால் பயிற்சியாளர், பயிற்சி பெறுபவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளையும் தேவைகளையும் மதிப்பீடு செய்து அதற்கு ஏற்றபடி தன்னுடைய அணுகுமுறையை மாற்றியமைக்க வேண்டும். ஆயுதப் போராட்டம் நடைபெறும் இடங்களில் நடைபெறுகின்ற உளவளத்துணைப் பயிற்சியானது வெறுமனே அறிவு, திறன் மற்றும் கல்விசார் மனப்பாங்கு என்பவற்றை மட்டுமல்லாது இதில் பங்குவகிக்கும் பயிற்சியாளருக்கு ஆதரவு அளித்து அவர்களது கடந்தகால வாழ்க்கையில் நடந்த வேதனையான சம்பவங்களைக் கையாளக் கூடியதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தினால் ஏற்பட்ட உளசமூக விளைவுகளைக் கையாள்வதற்கு உளவளத்துணை மட்டுமே வழிமுறையாகும் எனலாகாது. கடந்த தசாப்தங்களின் போது கிடைத்த நடைமுறைரீதியிலான அனுபவமானது வினைத்திறன் உடைய உளசமூகத் தலையீடுகள் வேறு பல வழிமுறைகளிலும் இருந்து வருகின்றது என்பதையும் கற்றுத் தந்தள்ளது. சிதம்பரநாதனின் 'TAG' (அரங்கு செயற்பாட்டக் குழுவினர்) இதனுடைய தலையீடுகளும் செயல் முறைகளும்' என்னும் கட்டுரையானது நாடகமும் நடனமும் எவ்வாறு பிள்ளைகளுக்கும் மற்றும் அவர்களது பெற்றோர், ஆசிரியர்களுக்கும் பயனளிக்கக்கூடியவை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இக்கட்டுரை உளவளத்துணைக்கான அடிப்படைக் கொள்கைகள் ஏனைய உளசமூகத் தலையீட்டு வேலைப்பாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை விளங்கிக் கொள்வதற்கு உதவ முடியும் என்பதை மேலும் விபரிக்கின்றது. இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளவாறான அணுகுமுறை ஒன்றினுடைய சுருக்கமான விபரிப்பானது பொதுவான தொனிப்பொருள் சம்பந்தமான விளக்கத்தை தருகின்றது. ஆகவே பெரும்பாலான வாசகர்கள் இனிவரும் இவ்விதழின் வெளியீடுகளில் தமது சொந்த உளசமூகத் தலையீடுகள் சம்பந்தமான விடயங்களை அலசுவதற்கு சவாலாக அமையும் என நம்புகின்றோம்.

இந்த இதழ் ஈவிலின் லிண்ட்னரின் பங்களிப்போடு நிறைவு பெறுகின்றது. அவர், தன்னுடைய "அவமானமும் கௌரவமும்: உலகக் கிராமத்தில் பிரதேச முரண்பாடுகள்" என்கின்ற

கட்டுரையில் உலகமயமாக்கல் படிமுறைகளின் கண்ணோட்டத்தில் பிரதேசரீதியில் நடைபெறுகின்ற ஆயுதப் பேராட்டங்களைப் பார்க்க முனைந்துள்ளார். இவ்வகையான உலகமயமாக்கல் படிமுறையின் ஒரு பேறாகவே இப்புதிய இதழும் வெளிவருகின்றது. லிண்ட்னர் தருகின்ற ஒரு குறிப்பானது, மேற்கத்தியக் கொள்கைகளை மேற்கத்தேயம் அல்லாத சமூதாயங்களில் அறிமுகப்படுத்துகின்ற / திணிக்கின்ற விடயத்திற்கு எம்மை மீண்டும் இட்டுச்செல்கின்றது. புதிய விடயங்களை அறிமுகப்படுத்துவதில் ஒரு தவறுமில்லை. மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற வேளைகளில் அது அப்படித்தான் அமைய வேண்டும். கலாசார வித்தியாசங்கள் பிழைகளை உருவாக்குவதில்லை; மாறாக இவ்வேறுபாடுகள் பரஸ்பரம் செழுமையாக்குபவையாகக் காணப்படும். ஆயினும் வேறுபாடுகள் மதிப்புடன் கூடிய உறவு முறைகளை அடியொற்றியே செழுமையாக்கப்பட முடியும். எப்பொழுது மதிப்பும், ஏற்றுக்கொள்ளுதலும் தோல்வியடை-கிறதோ, அப்பொழுது தாங்கள் பாதிக்கப்பட்டுவிட்டோம் என்று உணர்கின்றவர்கள், ஏற்பட்டிருக்கின்ற பிளவுகளை நியாயப்படுத்துவதற்காக, வேறுபாடுகளை வெளிச்சப்படுத்திக் காட்டுவார்கள். உண்மையில் பிளவுகள் வேறுபாடுகளால் தோன்றவில்லை. அவை அவமானப்படுத்தலின் அடியாகவே தோன்றுகின்றன.

(கூஸ் வன் டர் வீர்)

## இலங்கையில் சமுதாய வடு

(தயா சோமசுந்தரம்)

இலங்கையில் நடைபெற்று வருகின்ற இனப்போரானது, தனிமனித, குடும்ப மட்டங்களில் பல்வேறுவிதமான உளசமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. மேலாக, அது இலங்கையின் சமூகங்களிடையே, ஒரு அழிவுபூர்வமான விளைவை ஏற்படுத்தியிருக்கிறது; இதனையே நாம் ‘சமுதாயவடு’ என்று குறிப்பிடுகிறோம். இது எல்லா அபிவிருத்திகளிலும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதுடன், சமூகமூலதனம், கட்டுமானம், நிறுவனம் என்பவற்றில் அழிவையும் ஏற்படுத்தியுள்ளது. சமூகத்தின் அடிப்படை இயல்புகளான சமூகமயமாக்கல், சமூகவிழுமியங்கள், சமூக வலைப்பின்னல்கள் போன்றவற்றில் இது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும், வெளிப்படையாகத் தெரிகின்ற இவ்வாறான எதிர்மறையான நிகழ்வுகளினூடேயும், சில நேர்மறை அம்சங்களும் அடையாளம் காணப்படுகின்றன. சாதிப் பாகுபாட்டில் வீழ்ச்சி, சமூகக் கட்டமைப்புகளின் தோற்றம், தற்கொலைவீதம் குறைந்தமை, பெண்களின் எழுச்சி போன்றன சில உதாரணங்களாகும். இந்தக் கட்டுரை இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தத்துடன் தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுவரும் நேர்மறையான, எதிர்மறையான விளைவகளைக் கூறமுற்படுவதுடன்,

எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்ளக்கூடிய நிகழ்ச்சித்-திட்டங்களைப் பற்றியும் சித்தரிக்கின்றது

முக்கிய சொற்பதங்கள்: *சாதி முறை, சமூதாய மனவடு, கையாளும் உத்திகள், உளசமூகப் பிரச்சினைகள், மனவடு, யுத்த நெருக்கீடு*

## ***ஆயதப் போராட்டம் நடைபெறும் இடங்களில் மனநல நிகழ்ச்சிகள்: வரையறை எதுவுமற்ற வைத்தியர்களின் பொஸ்னியா-கேர்சிகோவினா விலுள்ள உளவளத்துணை நிலையங்கள்***

(கஸ் டி யோங், றெல்வ் ஜெ கிளேபர் & வெஸ்னா பியுறடிக்)

சிக்கல்கள் நிறைந்த, அவசர நிலைமைகளில் நடைபெறுகின்ற உதவித் திட்டங்களில் உளநலப் பணிகளும் முக்கிய ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும், இது ஒரு அண்மைக்காலத்துக் கருத்து நிலை விருத்தியாகும். எனினும், கொள்கைளை அடியொற்றிய நடைமுறைகளும், முன்னர் செய்த தலையீடுகளை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் பயனுடையதான, பொருத்தமான, நிலைத்து நிற்கக்கூடியதான திட்டங்களைப் பெறுதலும் குறைவாகவே காணப்படுகின்றது.

இந்தக் கட்டுரை 1994–98ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் போஸ்னியா – கேர்சிகோவினா பிரதேசத்தில், எல்லை கடந்த மருத்துவக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட உளநலத்திட்டங்களின் கொள்கைச் சட்டம், இலக்குகள், நடைமுறைப்படுத்தல் மற்றும் தலையீட்டு நடவடிக்கைகள் பற்றி விபரிக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் ஏறத்தாழ 10,000 மக்கள் உதவியளிக்கப்பட்டார்கள். இந்தத் திட்டங்களின் இலக்குகளாக கலாசாரத்துடன் ஒத்துப்போகின்ற

ஆறுதலளித்தல், தீவிரமான நெருக்கீட்டைக் கையாளுதல், கையறு நிலையிலிருந்து விடுபடல், பிரச்சினைகளைத் தாங்கும் திறன்களை (தடுப்புக் கவசங்களை) மீள வலியுறுத்தல் என்பன அமைந்திருந்தன.

மூன்று மாதகாலப் பயிற்சிக் காலத்தின் பின்னால் (இதில் 70 உளவளத்துணை-யாளர்களும், மேற்பார்வையாளர்களும் வேலை செய்தனர்) 10 உளவளத் துணை நிலையங்கள் ஸ்தாபிக்கப்-பட்டன. உளவளத்துணையாளர்களால் வழங்கப்பட்ட உதவிகளும், தலையீடுகளும் பெரியளவிலான உளம் சார்ந்த கல்வியூட்டல், பயிற்சியளித்தல், தனியாள் வெளிக்கள வேலைகள் தொடக்கம், நெருக்கீட்டில் தலையிடுதல், சுருக்கமான உளசிகிச்சை – உளவியல் கட்டமைப்பு, சுயக்கட்டுப்பாடு சம்பந்தமான வேலைகள், சுய உதவியளிக்கக்கூடிய திறன்களைப் பயிற்றுவித்தல், ஒருவருடைய உணர்ச்சிகளின் அனுபவங்களை மீளத் தொடர்புபடுத்தல், பாரிய உளநெருக்கீடுகள் தொடர்பான தனிப்பட்ட அழுத்தப்படுத்தல்கள் என்பன வரை இருந்தன.

யுத்தம் காரணமாகப் பாரதூரமான உளநலப் பிரச்சினைகள் தோன்றலாம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், உதவியளிக்கும் திட்டங்கள் கலாசாரப் பொருத்தம் சம்பந்தமான ஒத்துப்போகாமைகளினாலும், பல்வேறுபட்ட அவசர உளநலத்திட்டங்களின் தலையீடு சம்பந்தமான மாறுபட்ட கருத்துகளாலும் திணறிப்போனது.

இந்தக் கட்டுரை, சண்டை நடைபெற்ற காலங்களின் போது உருவாக்கம் பெற்ற ஒரு பயிற்சித் திட்டம் பற்றியும், அதனைத் தொடர்ந்து ஸ்தாபிக்கப்பட்ட உளவளத்துணை நிலையங்கள் பற்றியும், அவற்றை 6 வருடகாலத்திற்கு தொடரக்கூடியதாக இருந்த நிலைமை பற்றியும் விபரிப்பதனால், இது இவ்வகையான திட்டங்களின் பிரயோகப் பயன்பாடு பற்றி விளங்கிக்கொள்வதற்கு ஒரு உகந்த உதாரணமாக அமைந்திருக்கிறது.

முக்கிய சொற்பதங்கள்: *தீவிர கவனிப்பு, மனவடு, உளவளத்துணை, மனநலம், பொஸ்னியா கேர்சிகோவினா யுத்த நெருக்கீடு*

## ஆயுதப் போராட்டம் நடை-பெறுகின்ற பிரதேசங்களில் உளவளத்துணையாளரை பயிற்றுவித்தல்

(கூஸ் வன் டர் வீர)

இந்தக் கட்டுரை, ஆயுத முரண்பாடுகள் உள்ள இடங்களில், உளவளத்துணை-யாளர்களாகப் பணியைத் தொடங்கியவர்களின் கற்றல் தேவையைப் பற்றியதாகும். பொதுவாக, உளவளத்துணையாளர் பயிற்சிக்காக பாடத்திட்டமானது, உளவளத் துணை வழங்குவதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றினது எண்ணங்களின் அடிப்படையாகவே இருக்கும். ஆனால் இப்பாடத்திட்டம் எல்லா நேரங்களிலும், பயிற்சி பெறுபவர்களின் தனிப்பட்ட தேவைகளையும் பின்னணிகளையும் கவனத்தில் எடுப்பதாகக் கொள்ளமுடியாது. ஆயுத முரண்பாடுகள் உள்ள இடங்களில் நடைபெறும் உளவளத்துணைப் பயிற்சிகள் வெற்றிகரமாக வரவேண்டுமாயின், பயிற்சியாளர் இவ்வாறான தனிமனித தேவைகளையும், பின்னணிகளையும் மதிப்பிட்டு, அதற்கேற்ற வகையில் தனது பயிற்சி முறைமையைச் சீர்செய்துகொள்ள வேண்டும். இப்படியான பயிற்சித்திட்டங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு வித்துவத்தனமான, சிக்கல்கள் நிறைந்த கல்வியளித்தலைவிட எளிமையான, குறுகியகால, நடைமுறைச் சாத்தியமான பயிற்சியளித்தலே தேவையாக உள்ளது. இதனையும்விட, இவ்வாறு பயிற்சி பெறுபவர்களுக்கு, தாங்கள் வாழ்க்கையில் எதிர்கொண்ட பாரிய நெருக்கீடுகளின் விளைவுகளைக் கையாளக்கூடிய வகையில் ஆதரவும் தேவைப்படுகிறது. எனவே இவ்வாறான பயிற்சியானது ஒரே நேரத்தில் கல்வியூட்டலாகவும், குழுநிலை உளச்சிகிச்சையாகவும் அமைந்து இருக்கும். இந்த வகையான பயிற்சியில் ஈடுபட்ட அனுபவத்தைக் கூறமுற்படும் போது நாம் இரண்டு விடயங்களை விபரிக்கவேண்டும்; ஒன்று, கல்வி சார்ந்த விளக்கம்; மற்றையது சிகிச்சை சார்ந்த விளக்கம்.

முக்கிய சொற்பதங்கள்: *உளவளத்-துணைப் பயிற்சி, குழு சிகிச்சை, கற்கும் முறை, mentalizing, மனவடு அனுபவம்*

## அரங்கு செயற்பாட்டுக்குழுவினது தலையீடுகளும் முறைமைகளும்

(க.சிதம்பரனாதன்)

இந்தக் கட்டுரையில், சிறீலங்காவின் யாழ்ப்பாணத்தில், அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் முன்னெடுக்கப்படுகின்ற மூன்று விதமான உளசமூகத் தலையீடுகளைப் பற்றிப் பார்க்கலாம். இந்த உளசமூகத் தலையீடுகள் முறையே சிறுவர்கள், அவர்களது பெற்றோர், சமூகம், மற்றும் அவர்களது ஆசிரியர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்றன. இவை நடைமுறைப்படுத்தும் முறைமையினை உளவளத்துணையோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. உளவளத்துணை யாளர்கள் தங்களிடம் வருகின்ற துணைநாடிகளைத் தனிமையாகச் சந்தித்து, தங்களது மதிப்பையும், விசுவாசமான ஆர்வத்தையும் வெளிப்படுத்தி, ஒரு சிகிச்சைக்கான வெளியை ஏற்படுத்துவது போல, அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரும் அரங்கமூடாகவும், விளையாட்டுக்கள் ஊடாகவும் தங்களது உண்மையான ஆர்வத்தையும், மதிப்பையும் வெளிப்படுத்திச் சிகிச்சைக்கான வெளியை அமைக்கிறார்கள். இது ஒரு குணமாக்கும் படிமுறைக்குத் தளமிட்டு, சுயகணிப்பீடு மேம்படுதல் தொடக்கம் குறிப்பிடத்தக்க சமூக மாற்றங்கள் நடைபெறுவது வரையிலான உளநல முன்னேற்றங்கள் ஏற்பட வழிவகுக்கின்றது.

முக்கிய சொற்பதங்கள்: *நாடகம், உளவளத்துணை, உளசமூகத் தலையீடுகள்*

## அவமானம் அல்லது கௌரவம்: உலகக் கிராமத்தில் பிரதேச முரண்பாடுகள்

(எவலின் கோர்டா லின்ட்னர்)

அநேகமான சந்தர்ப்பங்களில் பிரதேச முரண்பாடுகள், சூழலில் இருந்து விடுபட்டு ஒரு வெறுவெளியில் நிகழ்வது போலவே கையாளப்படுகின்றன. இந்தக் கட்டுரையானது, பிரதேச முரண்பாடுகள் நடைபெறும் பிரதேசங்களை உலகமயமாக்கல் கண்ணோட்டத்தோடு பார்க்க விழைகின்றது. இப்படியான நடைமுறைகளில் அவமானம் என்கின்ற உணர்வே முக்கிய பங்குவகிக்கின்றது என்று கருதப்படுகின்றது. 'மனித குலத்தோர் அனைவருக்கும் மனிதர்க்குரிய கௌரவம் கிடைக்கப்பெறவேண்டும்' என மனித உரிமைகள் இலட்சியப்படுத்துகின்றமை மிக உயர்ந்த நிலையிலுள்ள இலட்சியமாக இருப்பதனால், அவை மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம், 'அவமானப்பட்டுவிட்டோம்' என்ற உணர்வை மிக அதிகளவில் தோற்றுவிக்கின்றன. உலகக் கிராமம் இனி எவ்வாறு இருக்கப் போகின்றது எனும் கேள்வியே, ஒவ்வொரு முரண்பாடுகளையும் உலகளாவிய ரீதியில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும்போது எழுகின்றது. மனித உரிமைகள் ஆட்சி செலுத்துமா? அவமானப்படுத்தி வெற்றி கொள்ளும் கீழ்த்தரமான வேலையில் தொடர்ந்தும் சான்றோர் ஈடுபடுவரா? இப்படியான விவாதங்களில் முக்கியமாக வெளிப்படும் "எனது மக்களைப் பாதுகாத்தல்"; "சுதந்திரம்"; "ஸ்திரத்தன்மையைப் பேணுதல்"; "சமாதானம்"; "சண்டை"; "எதிரி"; "நண்பர்"; "பயங்கர வாதி"; "படைவீரர்"; "பொலிஸ்" போன்ற சொற்களினூடே கொணரப்படும் உணர்வலைகள் பற்றி இந்தக் கட்டுரை ஆராய்கின்றது.

முக்கிய சொற்பதங்கள்: *egalisation, சமூகமயமாக்கல், மனித உரிமைகள், அவமானம், மதிப்பிழக்கச் செய்தல், பிரதேச பிணக்குகள்*